1971 ஜூலை 16]

திருப்பூர் பகுதியில் தொழிற்பேட்டை

*267 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர் அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள் திருப்பூரில் ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தொழில் வணிக இயக்குநரிடம் கேட்டுள்ளார்கள். இதற்கான பூர்வாங்க விசாரணைகளை இயக்குநர் நடத்தி வருகிறார்.

திரு. க. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் ஏறத்தாழ 600 பனியன் பாக்டரிகள் இருக்கின்றன. மேலும் இப்போது அவை பலயிடங்களில் வாடகைக் கட்டடங்களில் இருந்து வருகின்றன. அந்த இடத்தில் ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அந்தத் தொழிலுக்கு சீராக பயன்படும். மேலும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஊசிகள், மெஷின்ஸ் போன்றவை தருவிக்கப்படுகின்றன. அவற்றை கூட்டுறவுத் தொழிற்பேட்டை மூலம் தமிழ்நாட்டில் தயாரித்தால் அந்தத் தொழிலுக்கு இன்னும் ஊக்கம் ஏற்படும். ஆகவே, அதை சிறு தொழில் வாரியத்தின் மூலம் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு தொழிற்பேட்டை அங்கு அமைப்பது நியாயம் என்று அரசு கருதுகிறது. விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பனியன்கள் ஏற்றுமதி

*268 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பனியன் (பின்னல்) தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. க. துரைசாமி : கைத்தறித் துணிகளை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு எடுத்துக்கொள்கிற முயற்சியைப்போன்று இந்தப் பனியன் தொழிலும் சிறந்தோங்க வெளிநாடுகளில் சந்தையைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கென்று எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் இருக்கிறது. பனியன்களைப் பொறுத்தவரையிலும் வெளி மாநிலங்களுக்கு வாங்கி அனுப்புகிறார்கள். இங்குள்ளவர்கள் அதற்கான முயற்சிகளை எடுப்பார்களானால் அரசாங்கம் ஒத்துழைக்கும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, பனியன் தொழில் என்பது இப்போது வளர்ச்சி அடைந்து வருகிற ஒரு தொழில். அதை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை அரசு செய்யவேண்டும்